(திரு என். வரதராஜன் எழுந்தார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலுமே வறட்சி நிலைமை இருக்கிறது. மூலக் கேள்வி திருச்சி மாவட்டத்தைப் பற்றியது. எல்லா உறுப்பினர்களும் தங்கள் தங்கள் மாவட்டத்தைக் குறித்துக் கேட்டுக்கொண்டிருந்தால் மற்ற கேள்விகளுக்கு நேரம் போதாமல் போய்விடும்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, பொதுவாகவே, தமிழ் நாட்டில் இந்த ஆண்டு வறட்சி நிலைமை இருக்கிறது என்பதை அரசு ஏற்கனவே அறிவித்திருக்கிறார்கள். எந்தெந்த மாவட்டங்களில் எந்த அளவு பாதிக்கப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதையும், அதற்குரிய முழு நிவாரணத்திற்கு என்ன நடவடிக்கைகளை அரசு எடுத்திருக்கிறது என்பதையும் பற்றிய விவரக் குறிப்பை இந்த மன்றத்தில் அமைச்சர் அவர்கள் வைத்தால் உதவியாக இருக்காதா ? அதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இதனுடைய விவரக் குறிப்பை என்னுடைய நிதி நிலை அறிக்கையிலே கூட நான் குறிப்பிட்டிருக்கிறேன். இந்த மன்றத்திலேயே அடிக்கடி, பல்வேறு சந்தர்ப்பங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைக்குக் கூட, வினா நேரம் முடிந்தவுடனே, செங்கற்பட்டு, வடாற்காடு, கோயம்புத்தூர், இன்னும் மற்ற மாவட்டங்களில் இருக்கும் வறட்சி நிலைமையைப் பற்றி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் வர இருக்கிறது. ஒரு கோடியே 67 இலட்சம் ரூபாய் இந்த நிவாரணத்திற்காகச் செலவு செய்ய ஒரு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை மாவட்டவாரியாக எவ்வாறு பங்கிடப்பட்டிருக்கிறது என்பது விவரமாக நான் அளிக்க இருக்கும் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. எந்த எந்த மாவட்டத்தில் என்ன என்ன வேலைகள் மேற்கொள்ளப்படும் என்பது அடிக்கடி இந்த மன்றத்திற்கு அறிவிக்கப்பட்டு வருகிறது.

DR. H. V. HANDE : Is there failure of crops in Tiruchirappalli district? Have the Government received reports with regard to total failure of crops there and may I know what is the position of Government with regard to procurement? Are the Government able to procure sufficiently according to their target and have the Government got reports that crops are all right from all districts? What is the general information emanating from the reports that all Collectors had sent to the Government?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I have no procurement figures at present. The hon. Member may put a question to the Hon. Minister for Food and elicit the information. But as far as I am aware the tempo of procurement is not commensurate with last year's performance.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண்கள் 134, 135, 136, 137 ஆகியவை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

மெட்டனில் மஞ்சள்

*138 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு பொதுச் சுகாதார அபிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

குடியாத்தம் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினரிடமிருந்து மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்களுக்கு மெட்டனில் மஞ்சள் கலர் (**Metanil Yellow**) விஷயத்தைப் பற்றி 29-9-1967-ம் தேதியில் எழுதப்பட்ட கடிதத்தின் மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன ?

1969 மார்ச் 3]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கனம் அங்கத்தினர் கோரியது குறித்து பரிசீலனைசெய்து 26–4–1968 அன்று அவருக்குத்தக்க பதில் அனுப்பப்பட்டது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இது பம்பாய்க் கம்பெனியிலிருந்து தயாராகி வரக்கூடிய ஒருவிதமான மஞ்சள் கலர். இதை உணவுக்கோ, அல்லது பலகாரங்களுக்கோ மிட்டாய்கடைகளில் உபயோகப்படுத்துகிறார்கள். இதை உபயோகப்படுத்தியதற்காக வேண்டி சில வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அப்படியிருக்கும்போது, இதைக் கடைகளிலேயே விற்கக் கூடாது என்கிற அளவுக்குத் தடை விதிக்க வேண்டுமேயல்லாது, உபயோகப்படுத்திய பிறகு நடவடிக்கை எடுக்கக் கூடாது. அதற்கான ஏற்பாடு ஏதாவது செய்யப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டத்தின்கீழ் இந்த மெட்டனில் எல்லோ என்கிற மஞ்சள் நிற வண்ணம் தடை செய்யப்படவில்லை, ஆனால், இந்த மெட்டனில் எல்லோ என்கிற வண்ணம் உணவில் கலப்படம் செய்யப்பட்டால் பாதகம் ஏற்படுமா என்பதற்கு இப்பொழுது பரிசீலனை நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அதைக் கலப்பதால் பாதகம்தான் ஏற்படும் என்ற முடிவு ஏற்படுமானால், அதன் பிறகுதான் அதைத் தடை செய்ய முடியும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போல், வேறு யார்மீதும் இத்தக் கலப்படத் தடுப்புச் சட்டத்தின் விளைவாக நடவடிக்கை எடுத்ததைப் பற்றியோ அல்லது தண்டனை கொடுத்ததைப் பற்றியோ அரசாங்கத்திற்கு எந்தவிதத் தகவலும் இருக்கவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், அரக்கோணத்தில் ஒரு மிட்டாய்க் கடைக்காரர் மீது சானிடரி இன்ஸ்பெக்டரே நடவடிக்கை எடுத்து, அபராதம் விதித்திருக்கிறார். ஆகையால், தயவு செய்து அந்த முனிசிபாலிடியில் அது பற்றி விசாரணை நடத்தி, அது விஷயமாக அந்த சானிடரி இன்ஸ்பெக்டர்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்த மெட்டனில் எல்லோ என்ற வண்ணம்தான் கலக்கப்பட்டது என்பது கூட விவரம் தெரியாமல் இருக்கலாம். ஆனால், இதிலெல்லாம் பரிசீலனை செய்துதான் பதில் சொல்ல முடியும்.

வெள்ளியணைக்கு மருத்துவ மனை.

*139 வினு—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் வட்டம் வெள்ளியணையில் ஒரு மருத்துவ மனை துவக்க வேண்டும் என கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) வெள்ளியணை கிராம மருத்துவ மனையை ஒழுங்கான மருத்துவ மனையாக மாற்ற 19–3–1965 தேதியன்று உத்தரவு பிறப்பிக்கப் பட்டது.

பழங்குடி மக்கள் நலன் குறித்த ஆய்வுக்குழு

*140 வினு—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1968–ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 19–ம் தேதியளவில் பழங்குடி மக்கள் மேம்பாட்டுத் திட்ட ஆய்வுக் குழு அமைச்சரைச் சந்தித்துப் பேசியதா ?